உ

சிவமயம்



இருபாலையைப் பிறப்பிடமாகவும்,
உசனை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் மாணிக்கம் பூபதி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# மாணிக்கம் பூபதி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# ஞாபகார்த்த வெளியீடு

# சைவ அபரக் கிரியை இயல்

2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



மனிதருள் மாணிக்கமாய்

அன்புநிறைந்த பேரொளியாய்

இன்சொல்பேசி இனிமையுடன்

எமைஎலாம் பேணிக்காத்து

வாழ்வாங்கு வாழ்ந்து நின்று

இன்று வானுறையும் தெய்வமாகிய

எமது அன்புத்தெய்வத்தின்

பொன்மலர்ப் பாதங்களிற்கு

இம்மலரினைக் காணிக்கையாக்குகின்றோம்.

**அன்புடன்**
**குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.



அன்னை மடியில்
07-01-1929

ஆண்டவன் அடியில்
23-02-2012

அமரர்

# மாணிக்கம் பூபதி

அவர்கள்

## திதி நிர்ணயம்

ஆண்டு கரமதில் மாசித்திங்கள் பூரட்டாதியோடு
பூண்டதிதி பூர்வபக்க பிரதமை - நீண்ட புகழ்
பூபதி பூதவுடல் நீத்து புண்ணியவதியாகி
சிவபதம் எய்திய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணாது
உனையுனு முணர்வைநல்கா யொற்றியூ ருடையகோவே.

## திருவாசகம்

தனியனேன், பெரும்பிறவிப்பௌவித்து, எவ்வத்
தடம்திரையால், எற்றுண்டு, பற்றுஒன்று இன்றிக்
கனியின் நேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு, காமவான்சுறவின் வாய்ப்பட்டு
'இனி' என்னே உய்யுமாறு? என்று என்று எண்ணி
அஞ்சு எழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே! முதல், அந்தம் இல்லாமல்லல்
கரைகாட்டி, ஆட்கொண்டாய், மூர்க்கனேற்கே.

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா'
முக்கணா! நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய்! மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியைச் சாருமால்
தேன் அடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாநடம் செய் வரதர் பொற்றாள் தொழ.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொடு அவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் என வினை கடிது ஏகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதிவிளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## பட்டினத்தார் பாடல்

ஐயுந் தொடர்ந்து, விழியுஞ் செருகி, யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றி யூருடையீர்! திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே.

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்திருக்கு காண் இது எப்படியோ
அறமார் புகழ்தில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே! அதுகாண்நல் மருந்துனக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையில் அருளிய

## போற்றித் திரு அகவல்

சகத்தின் உற்பத்தி

***(உயிர்கள் உறும் அல்லல்கள் அனைத்தையும் நீக்குபவன் சிவபெருமானே என அவனைப் போற்றுதல்)***

*நிலைமண்டில் ஆசிரியப்பா*

*திருச்சிற்றம்பலம்*

நான் முகன் முதலா வானவர் தொழுது எழ,
ஈர் அடியாலே மூ உலகு அளந்து,
நால் திசை முனிவரும் ஐம்புலன் மலரப்,
போற்றிசெய் கதிர்முடித் திருநெடுமால், அன்று

அடி, முடி அறியும் ஆதரவு அதனில்
கடுமுரண் ஏனம் ஆகி, முன் கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து, பின் எய்த்து,
ஊழி முதல்வ, சய! சய! என்று,
வழுத்தியும் காணா மலர் அடி இணைகள்

வழுத்துதற்கு எளிது ஆய் வார் கடல் உலகினில்,
யானை முதலா எறும்பு ஈறாய,
ஊனம் இல், யோனியின் உள்வினை பிழைத்தும்;
மானுடப் பிறப்பினுள், மாதா உதரத்து,
ஈனம் இல் கிருமிச் செருவினில் பிழைத்தும்

ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்,
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈர்இரு திங்களில் பேர்இருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு திங்களில் ஊறு அலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தச மதி தாயொடு தான்படும்

துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை
ஈண்டியும், இருத்தியும், எனைப்பல பிழைத்தும்;
காலை மலமொடு, கடும்பகல் பசி, நிசி
வேலை நித்திரை, யாத்திரை, பிழைத்தும்

கரும்குழல், செவ்வாய்; வெள்நகை; கார்மயில்
ஒருங்கிய சாயல்; நெருங்கி, உள் மதர்த்துக்,
கச்சு அறநிமிர்ந்து, கதிர்த்து, முன்பணைத்து
எய்த்து இடைவருந்த எழுந்து, புடைபரந்து,
ஈர்க்கு இடைபோகா இளமுலை மாதர் தம்

கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்தும்,
பித்த உலகர் பெரும் துறைப் பரப்பினுள்
மத்தக் களிறு எனும் அவாவிடைப் பிழைத்தும்;
கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்;

நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம்பு ஆய பலதுறை பிழைத்தும்;
தெய்வம் என்பது ஓர்சித்தம் உண்டாகி
முனிவு இலாதது ஓர்பொருள் அது கருதலும்
ஆறுகோடி மாயா சத்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு வேறு தம்மாயைகள் தொடங்கின
ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி, நாத்தழும்பு ஏறினர்.
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர்; பெருகவும்

விரதமே பரம் ஆக, வேதியரும்,
சரதம் ஆகவே, சாத்திரம் காட்டினர்
சமய வாதிகள் தம் தம் மதங்களே
அமைவது ஆக, அரற்றி மலைந்தனர்,
மிண்டிய மாயா - வாதம் என்னும்

சண்ட மாருதம் சுழித்து அடித்து, ஆ அர்த்து
உலோகாயுதன் எனும் ஒண் திறல் பாம்பின்
கலா பேதத்த கடுவிடம் எய்தி,
அதில்பெரு மாயை எனைப் பலசூழவும்,
தப்பாமே, தாம்பிடித்து சலியாத்,

தழல் அது கண்ட மெழுகு அதுபோலத்,
தொழுது, உளம் உருகி, அழுது, உடல் கம்பித்து,
ஆடியும், அலறியும், பாடியும், பரவியும்
'கொடிறும் பேதையும் கொண்டது விடாது' எனும்
படியே ஆகி, நல்இடைஅறா அன்பின்,

பசுமரத்து ஆணி அறைந்தால் போலக்,
கசிவது பெருகிக், கடல் என மறுகி,
அகம் குழைந்து, அனுகுலம் ஆய், மெய்விதிர்த்துச்
சகம்போய், என்று தம்மைச் சிரிப்ப
நாண் அது ஒழிந்து, நாடவர் பழித்துரை

பூண் அதுவாக, கோணுதல் இன்றிச்,
சதுர் இழந்து, அறி மால் கொண்டு, சாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதியது பரம அதிசயம் ஆகக்
கற்றா மனம் எனக் கதறியும், பதறியும்
மற்று ஓர் தெய்வம் கனவிலும் நினையாது,

அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி, அருளிய பெருமையைச்,
சிறுமை என்று இகழாமே, திருவடி இணையைப்
பிறிவினை அறிய நிழல் அதுபோல,
முன்பின் ஆகி, முனியாது, அத்திசை

என்பு நைந்து உருகி, நெக்கு நெக்கு ஏங்கி
அன்பு எனும் ஆறு கரை அது புரள
நன்புலன் ஒன்றி 'நாத' என்று அரற்றி
உரைதடுமாறி, உரோமம் சிலிர்ப்பக்
கர மலர் மொட்டித்து, இருதயம் மலரக்

கண்களி கூர நுண்துளி அரும்பச்,
சாயா அன்பினை, நாள்தொறும் தழைப்பவர்
தாயே ஆகி, வளர்த்தனை போற்றி;
மெய்தரு வேதியன் ஆகி, வினைகெடக்,
கைதரவல்ல கடவுள் போற்றி!

ஆடக மதுரை அரசே, போற்றி!
கூடல் இலங்கு குருமணி போற்றி!
தென் தில்லை மன்றினுள் ஆடி, போற்றி!
இன்று எனக்கு ஆர் அமுது ஆனாய் போற்றி!
மூவா நான்மறை முதல்வா போற்றி!

சே ஆர் வெல்கொடிச் சிவனே போற்றி!
மின்ஆர் உருவ விகிர்தா, போற்றி!
கல் நார் உரித்த கனியே, போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவாய், கனகக் குன்றே, போற்றி!
ஆ! ஆ! என் தனக்கு அருளாய் போற்றி!

படைப்பாய், காப்பாய், துடைப்பாய், போற்றி!
இடரைக் களையும் எந்தாய், போற்றி!
ஈச, போற்றி! இறைவ, போற்றி!
தேசப் பளிங்கின் திரளே, போற்றி!
அரைசே, போற்றி! அமுதே போற்றி!

விரை சேர் சரண விகிர்தா, போற்றி!
வேதி, போற்றி! விமலா, போற்றி!
ஆதி, போற்றி! அறிவே, போற்றி!
கதியே, போற்றி! கனியே, போற்றி!
நதிசேர் செம்சடை நம்பா, போற்றி!

உடையாய், போற்றி, உணர்வே, போற்றி!
கடையேன் அடிமை கண்டாய், போய்!
ஐயா, போற்றி! அணுவே, போற்றி!
சைவா, போற்றி! தலைவா, போற்றி!
குறியே, போற்றி! குணமே, போற்றி!

நெறியே, போற்றி! நினைவே, போற்றி!
வானோர்க்கு அரிய மருந்தே, போற்றி!
ஏனோர்க்கு எளிய இறைவா, போற்றி!
மூஏழ் சுற்றம் முரண்உறு நரகிடை
ஆழாமே அருள் அரசே, போற்றி!

தோழா, போற்றி! துணைவா, போற்றி!
வாழ்வே, போற்றி! என்வைப்பே, போற்றி!
முத்தா, போற்றி! முதல்வா, போற்றி!
அத்தா, போற்றி! அரனே, போற்றி!
உரை, உணர்வு, இறந்த ஒருவ, போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிகடல் உலகின் விளைவே, போற்றி!
அருமையில் எளிய அழகே, போற்றி!
கருமுகில் ஆகிய கண்ணே, போற்றி!
மன்னிய திருஅருள் மலையே, போற்றி!
என்னையும் ஒருவன் ஆக்கி, இரும் கழல்

சென்னியில் வைத்த சேவக, போற்றி!
தொழுதகை துன்பம் துடைப்பாய், போற்றி!
அழிவு இலா ஆனந்த வாரி, போற்றி!
அழிவதும், ஆவதும் கடந்தாய், போற்றி!
முழுவதும் இறந்த முதல்வா, போற்றி!

மான் நேர் நோக்கி மணாளா போற்றி!
வானகத்து அமரர் தாயே, போற்றி!
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய், போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய், போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய், போற்றி!

வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய், போற்றி!
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய், போற்றி!
அளிபவர் உள்ளத்து அமுதே, போற்றி!
கனவிலும் தேவர்க்கு அரியாய், போற்றி!
நனவிலும் நாயேற்கு அருளினை, போற்றி!

இடை மருது உறையும், எந்தாய் போற்றி!
சடையிடைக் கங்கை தரித்தாய், போற்றி!
ஆரூர் அமர்ந்த அரசே, போற்றி!
சீர் ஆர் திருவையாறா, போற்றி!
அண்ணாமலை எம் அண்ணா, போற்றி!

கண்ஆர் அமுதக் கடலே, போற்றி!
ஏகம்பத்து உறை எந்தாய், போற்றி1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் பெண்உரு ஆனாய், போற்றி!
பராய்த்துறை மேவிய பரனே, போற்றி!
சிராப்பள்ளி மேவிய சிவனே, போற்றி!

மற்று ஓர் பற்று இங்கு அறியேன், போற்றி!
குற்றாலத்து எம் கூத்தா, போற்றி!
கோகழி மேவிய கோவே, போற்றி!
ஈங்கோய்மலை எம் எந்தாய், போற்றி!
பாங்குஆர் பழனத்து அழகா, போற்றி!

கடம்பூர் மேவிய விடங்கா, போற்றி!
அடைந்தவர்க்கு அருளும் அப்பா, போற்றி!
இத்தி தன்னின்கீழ் இருமூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே, போற்றி!
தென்நாடு உடைய சிவனே, போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா, போற்றி!
ஏனக் குருளைக்கு அருளினை, போற்றி!
மானக் கயிலை மலையாய், போற்றி!
அருளிட வேண்டும் அம்மான், போற்றி!
இருள்கெட அருளும் இறைவா போற்றி!

தளர்ந்தேன், அடியேன், தமியேன், போற்றி!
களம் கொளக் கருத அருளாய் போற்றி!
'அஞ்சேல்' என்று இங்கு அருளாய், போற்றி!
நஞ்சே அமுதா நயந்தாய், போற்றி!
அத்தா, போற்றி! ஐயா, போற்றி!

நித்தா, போற்றி! நிமலா, போற்றி!
பத்தா, போற்றி! பவனே, போற்றி!
பெரியாய், போற்றி! பிரானே! போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாய், போற்றி! அமலா போற்றி!
மறையோர் கோல நெறியே, போற்றி!

முறையோ? தரியேன்! முதல்வா, போற்றி!
உறவே, போற்றி! உயிரே போற்றி!
சிறவே போற்றி! சிவமே, போற்றி!
மஞ்சா, போற்றி! மணாளா, போற்றி!
பஞ்சுஏர் அடியாள் பங்கா போற்றி!

அலந்தேன், நாயேன், அடியேன், போற்றி!
இலங்குசுடர் எம்ஈசா, போற்றி!
கவைத்தலை மேவிய கண்ணே, போற்றி!
குவைப்பதி மலிந்த கோவே, போற்றி!
மலைநாடு உடைய மன்னே, போற்றி!

கலைஆர் அரிகேசரியாய், போற்றி!
திருக்கழுக்குன்றில் செல்வா, போற்றி!
பொருப்பு அமர் பூவணத்து அரனே, போற்றி!
அருவமும் உருவமும் ஆனாய், போற்றி
மருவிய கருணை மலையே, போற்றி!

துரியமும் இறந்த சுடரே, போற்றி!
தெரிவு அரிது ஆகிய தெளிவே, போற்றி!
தோளா முத்தச் சுடரே, போற்றி!
ஆள் ஆனவர்கட்கு அன்பா, போற்றி!
ஆரா அமுதே, அருளே, போற்றி!

பேர் ஆயிரம் உடைப் பெம்மான் போற்றி!
தாளி அறுகின் தாராய், போற்றி!
நீள் ஒளி ஆகிய நிருத்தா, போற்றி!
சந்தனச் சாந்தின் சுந்தர, போற்றி!
சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர மாமலை மேயாய் போற்றி!
எம் தமை உய்யக் கொள்வாய் போற்றி!
புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி!
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி!
கரும் குருவிக்கு அன்று அருளினை போற்றி!

இரும் புலன் புலர இசைந்தனை, போற்றி!
படி உறப்பயின்ற பாவக, போற்றி!
அடியொடு நடு, ஈறு ஆனாய், போற்றி!
நரகொடு, சுவர்க்கம் நால் நிலம், புகாமல்,
பரகதி பாண்டியற்கு அருளினை, போற்றி!

ஒழிவு அறநிறைந்த ஒருவ, போற்றி!
செழு மலர்ச் சிவபுரத்து அரசே, போற்றி!
கழுநீர் மாலைக் கடவுள், போற்றி!
தொழுவார் மையல் துணிப்பாய், போற்றி

குழைத்த சொல் மாலை கொண்டருள் போற்றி!
புரம் பல எரித்த புராண, போற்றி!
பரம், பரம் சோதிப் பரனே, போற்றி!
போற்றி! போற்றி! புயங்கப் பெருமான்!
போற்றி! போற்றி! புராண காரண

போற்றி! போற்றி! சய, சய போற்றி
திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மாணிக்கம் பூபதி அவர்களின் வாழ்வின் தடங்கள்

சகல வளங்களும் நிறைந்த கோப்பாய் நகரில் இருபாலை எனும் பெயருடன் விளங்கும் பதியில் சுவாமிநாதர் கந்தையா, ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் இல்லறம் எனும் நல்லறப் பேற்றின் பயனாய் மகளாக பூபதி அவர்கள் மண்ணில் வந்துதித்தார்.

தாய் தந்தையர்கள் செல்லமாக 'மனோ' எனும் நாமமிட்டு பாசத்துடன் அரவணைத்து பண்பும் அறிவும் ஒருங்கே அமைய வளர்த்து வந்தனர். சகோதர பாசத்துடன் உடன் பிறப்பாளரான ஏக சகோதரி மகேஸ்வரியுடன் மட்டற்ற மகிழ்ச்சியாக மாண்புற வாழ்ந்து இராமநாதன் கல்லூரியில் கல்வி பயின்று வந்தார். பின்னர் நாத்தாண்டியாவில் வாழ்ந்து சிலாபம் நகரில் கல்வியை தொடர வேண்டி இருந்தது. கல்வி பயிலும் காலத்தில் இசைத்துறையில் நாட்டமுடையவராய் சங்கீத ஞானம் பயின்றார். இவ்வேளையில் உருத்திரவீணையை மீட்டு வாசிப்பதில் ஈடிணையற்றவராக விளங்கினார்.

பெற்றவரும் உற்றோரும் மற்றோரும் போற்றும் வகையில் பெண்ணரசியாய் திகழ்ந்து மணப்பருவமடைந்த நங்கை நல்லாளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையாய் உசன் பதியைச்சேர்ந்த தாமோதரம்பிள்ளை கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அருந்தவப் புதல்வனும், வைத்தியக்கலாநிதியுமான மாணிக்கம் அவர்களை 20-08-1954-ல் மணம் முடித்துக்கொடுத்தனர்.

பத்தாவிற்கேற்ற பதிவிரதையாய் கணவனுடன் இணைந்து இல்லறம் எனும் நல்லறத்தினை ஆற்றினார். இவரது கணவனார் "என்கடன்பணி செய்து கிடப்பதே" என இலங்கைத்தீவில் குருநாகல், புத்தளம், அனுராதபுரம், வவுனியா, பதுளை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய மாவட்டங்களில் சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்று வைத்திய சேவையினை அர்ப்பணிப்புடன் ஆற்றிவரும் காலத்தில் அவருடன் உடன் உறைந்து அவர் சொன்ன பரிசே தொழும்பாய் பணிசெய்து நிறைவான வாழ்வினை நிரம்பப் பெற்றார்.

அவர்தம் கணவனுடன் சேர்த்து உசன் கந்தசுவாமி கோவிலில் எழுந்தருளியுள்ள தம் குலதெய்வமாகிய சிவனது அருட்பணியில் பிரதோஷம், சிவராத்திரி, எனப்பிறவுமாகிய விரதங்கள், பூசைகள், கிரியைகள், திருவிழாக்கள் எனக்கூறக்கூடிய சடங்குகளில் சேர்ந்து சங்கல்பித்து போற்றித் துதித்தது இன்றும் எம்மனக்கண்ணில் நிற்கின்றது.

வீட்டில் உறையும் இலட்சுமியாக தமது இல்லத்திலே அமைதியோடும் பொறுமையோடும் இறைசிந்தனையுடன் எந்நேரமும் நெற்றி நிறைய விபூதியும் குங்குமத் திலகமும் அழியாது இருக்கும். அன்னாரது தோற்றம் இன்றும் எம் மனதில் உதிக்கின்றது.

1960 காலப்பகுதியில் தொடர்ந்து ஐந்துமுறை இந்தியாவிற்கு தலயாத்திரை தனது கணவருடன் சென்று, புண்ணிய நதிகளில் தீர்த்தமாடி, புண்ணிய தலங்கள் பலவற்றை தரிசித்து, சாயிபாபா அருளாட்சி புரிந்த புட்டபர்த்திக்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரது ஆச்சிரமத்திற்கும் சென்று அருள்நிறைந்த வாழ்வினை அனுபவித்தார். என்ன குறையுமிலோமென இனிதாக வாழ்ந்து வந்தார். தவத்திரு குன்றக்குடி அடிகளாரது திருவடிகள் தீண்டப்பெற்றபேறு உடையது உசன் பதியில் அமைந்த எமது இல்லமாகும்.

தனது சகோதரி மகேஸ்வரி என்பவரை பொறியியலாளர் சரவணபவானந்தன் என்பவருக்கு மணமுடித்துக்கொடுத்து அவர்தம் குடும்ப மகிழ்வு கண்டு இன்புற்றிருந்தார். இவர்கள் தம் அருந்தவப் புதல்வனும் அமெரிக்காவில் பொறியியலாளருமான சுதர்ச்சனா கணேசன் மகள் சாந்தா என்பவரை வாழ்க்கைத் துணைவியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று இல்லறச் சோலையில் இனிதாக வாழும் நாளில் மழலைச் செல்வங்களாக கிருஷ்ஷன், யாழினி என்பவர்கள் கிடைக்கப் பெற்றார்கள். இவர்கள் நல்வாழ்வினைக் கண்டு இன்புற்று இவர் இறுதி நாள்வரை தம் பெறாமகன் சுதர்ச்சனாவைக் கைத்தொலை பேசியில் பிள்ளைப் பாசத்தோடு அழைத்து உரையாடிக் கொண்டிருக் கும் சம்பவம் மறக்க முடியாத ஒரு சம்பவமாகவே நிழலாடுகிறது.

அசாதாரண சூழ்நிலையில் அனர்த்தங்கள் பல வந்தபோதிலும் தளராது வீட்டில் சைவத்தைபேணியவர் நாளாந்தக் கடமைகளை ஆற்றி வரும் காலத்தில் தவறுதலாக வழுக்கி விழும்போது வலது காலில் நோ ஏற்பட்டது. விதி வசத்தால் புண்காயம் தோன்றிவிட்டது. இதனால் யாழ் போதனா வைத்திய சாலைக்கு சென்று, அங்கே தங்கி நின்று ஆகவேண்டிய மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. நோய் தணிந்தபோது தனது வீட்டிலிருந்து ஓய்வுபெறும் காலத்தில் குறிப்பாக மாசிமாத சிவராத்திரி தினத்திற்கு அடுத்தநாள் மருத்துவ சிகிச்சைபெற திரும்பவும் யாழ்போதனா வைத்தியசாலைக்கு சென்று, அங்கு அனுமதிக்கப் பட்டார். அங்கு தங்கி இருக்கும்போது எதிர்பாராதவிதமாக கணப்பொழுதில் 2012ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆந் திகதி வியாழக்கிழமை காலை 5.00 மணிக்கு இவரது ஆத்மா இவ்வுலகில் இவ்வுடலைவிட்டுப்பிரிந்து சென்றமை மீளாத்துயரில் எம்மையெல்லாம் ஆழ்த்தியது.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

> உங்கள் தோல்விகளை நினைத்துப் பார்த்து ஏன் தோற்றோம் என்று ஆராய்ந்து தோல்வியின் காரணத்தை தவிர்த்து வெற்றியடையுங்கள் என்கிறார்கள். அதற்குப் பதிலாக உங்கள் வெற்றிகளை ஆராயுங்கள் அவற்றுக்குக் காரணமாக இருந்த பண்புகளையும் பின்பற்றுங்கள். தொடர்ந்து வெற்றியடைவீர்கள்.
>
> **– ஹல்டேன் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆருயிர்க் கணவர் வைத்திய கலாநிதி கந்தையா மாணிக்கம் அவர்களின் ஆதங்கம்

இரவு பகல் அயராது பணிகள் செய்தீர் - நான்
இலவு காத்த கிளிபோலானேன் இங்கு
வரவு பார்த்து விரதநாள் உண்பதற்கு - உன்
விழி பூக்க வழிபார்த்து விழித்து இருப்பீர்
பரவு பரமன் உதைத்த கூற்றுவன் பிரித்தனன் - எனை
பதறவிட்டு கதறவைக்கும் விந்தையன்றோ
வரவு தருவாய் என்றிருந்தேன் என் மனையில் - நீ
ஒன்றுமே கூறாது சென்றதேனோ

## அன்பு சகோதரி திருமதி மகேஸ்வரி சரவணபவானந்தன் அவர்களின் ஆறாத்துயர்

காலத்தால் அழியாத காவியத்து நாயகியே
காலமெல்லாம் என்கண்நிறைந்த அன்னையே
ஞாலத்தில் என் அன்புச் சோதரியே அக்காவே
நாமெல்லாம் அலறிஅழ ஆருயிரே எங்குற்றாய்
சீலத்திருமகளேயுன் பதிமைத்துனர் சுற்றத்தார்
சிரிப்பிழந்து வாடுகின்றார், சிரம் தாழ்த்துகின்றார்
கோலங்கொள் நற்பாதத்து கீழிருக்க
குலமகளே அஞ்சலித்தோம் குயிலே நீ அமைதிகொள்.

## அன்புப் பெறாமகன் பொறியியலாளர் அமெரிக்கா சுதர்ச்சனா அவர்களின் சோகம்

எம் பண்பான அன்பான பெரியம்மா
எங்கு சென்றாய் எமைவிட்டு
நம் சுற்றத்தார் நாற்புறமும் பார்க்கின்றார்
நாமெல்லாம் நாதியற்று தவிக்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் கண்ணிரண்டில் நீரும் வற்றவில்லை
எம் கவலைதான் கலையவில்லை
உம் கண்மணிகளையும் ஏன் மறந்தாய்
உம்பால் நெய்ப்பந்தம் பிடிக்க நீ வைத்தாயோ.

## இரங்கல்பாக்கள்

**அருமை மருமக்கள் துரைராசாவின் அருந்தவப்புதல்வர்கள்**
**விஜிதா, பிருந்தா, றஜிவ் என்பவர்களின் பிரிவுத்துயர்**

உம்முயிர் போல் எம் உயிரை காத்து நின்றீர்
ஏற்றதான தாய் போல் எம்மை பேணிக்காத்தீர்
செம்மையோடு வாழ்வினிலே வாழச் செய்தீர்
தேன்மொழிக்கு இலக்கான புனிதமாமி
வெம்மைசேர் கொடுஞ்சொற்கள் பேசாய் என்றும்
விரும்பிடவே நாடி வந்த தெய்வ மாமி
இம்மையிலே உமைப் போல எங்கணும்
ஏற்றமுள்ள மாமிதனை காணலாமோ?

## மைத்துனி திருமதி கலாவதி ஶ்ரீகாந்தன் புலம்பல்

முந்தி நீயும் வந்தெமக்கு முழுமனதோடு உதவினையே
முந்தி யங்கும் போகவினை வந்ததுவோ
நந்தி மகன் பணிபுரிந்து நன்னெறியில் வாழ்ந்ததாலே
முந்தியவன் தனது அருகில் இருத்தினானோ
முந்திவந்து உன் அருகிருந்து ஆறுதல் பல
கூறினேன் கூற்றுவன் செயல் இதுவாயிற்றோ
அந்தி பகல் பாராது எந்நேரமும் ஆசிகள் பல
கூறினீர் உந்தன் ஆன்மா உய்வதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி லலிதா இரத்தினம் அவர்களின் இரங்கல்

பணிவிடை செய்து அமைதி கண்டேன்
பாரினிலே உயர்வான பாவையைக் கண்டேன்
துணிமணிகள் பூண்டுவரும் வடிவு கண்டேன்
துன்பத்திலும் துயரம் போக்கும் வழி கண்டேன்
பிணி வந்தபோதும் அணிநடை பயிலக் கண்டேன்
ஆறுதலடையும் அகம் கண்டேன்
தணியாத ஞாபகத்தில் சட்டம்பியார் வந்ததும்
சிரிக்கும் முகத்தை இனி எப்பிறவியில் காண்பேன்.

## உற்றார், உறவினர், அயலவர் உற்ற துயரம்

உற்றாரை வேண்டாது ஊர் வேண்டாது பேர் வேண்டாது
கற்றாரை வேண்டாது கற்பனவும் இனி அமையுமென்று
குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தன் குரைகழற்கு
கற்றாவின் மனம்போல கசிந்துருக காற்றாக பறந்தீரோ.

**பிறர் மனதைப் புண்படுத்தாதே**

1. எப்போதும் பிறரை நிந்திப்பதிலும் தூற்றுவதிலும், இகழ்வதிலும் அவர்களிடம் குற்றம் காண்பதிலும் ஈடுபடுவது சரியல்ல
2. இது மனிதனுக்கே பிடிக்காது எனில் கடவுளுக்கு எப்படிப் பிடிக்கும்.
3. இப்படிப் பிறரை தூஷிப்பது நம்மையே பாதிக்கும் என்பதை மறவாதீர்கள்
4. இன்று நீங்கள் சிரித்துக்கொண்டே பிறரை நிந்தித்தும் இகழ்ந்தும் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் அதுவே உங்கள் மீது வட்டியும் முதலுமாக திருப்பப்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
5. ஆகவே நிந்திப்பதும் அவமதிப்பதும் அவச்சொல்லால் பிறர் மனதைப் புண்படுத்துவதும் கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டியவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

இருபாலையைப் பிறப்பிடமாகவும்
உசனை வசிப்பிடமாகவும் கொண்டவரும்
வைத்திய கலாநிதி க. மாணிக்கம் அவர்களின் துணைவியார்

## அமரர்
## மாணிக்கம் பூபதி அவர்கள்



மலர்வு 07*01*1929
உதிர்வு 23*02*2012

நல்ல மனிதர் நீண்டநாள் நிலைப்பதில்லை
அம்மையே அதற்கு நீ விதிவிலக்கில்லை
காலமெல்லாம் பணிவிடை புரிந்து வாழ்ந்து
கணவனுக்கோர் நல்ல மனைவியானாய்
வைத்தியர் மாணிக்கரின் கலங்கரை விளக்கானாய்
அன்பான கணவனைத் தனியேவிட்டு
பொல்லாத காலன் வந்தழைத்தானோ உம்மை

அன்னாரின் மறைவினால் ஆறாத்துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச்சமூகம்**

23-02-2012

யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அபரக்கிரியை இயல்

எல்லாச்சமயங்களுக்கும் அவற்றிற்கெனத் தனித்தனியே பல சமயச் சடங்குகள் இருப்பதை நாம் அறிகின்றோம்.

சைவராகிய எமக்கு பிறப்பு முதல் இறப்பு வரையும் இறப்பின் பின்னரும் பல சமயச் சடங்குகள் நடைபெறுகின்றன. இவையாவும் சிவாகமங்களில் விதித்தபடி நடைபெறுகின்றன. அப்படியே நடைபெற வேண்டியது இன்றியமையாதது. சைவர் ஒருவரின் மரணத்தின் பின்னர் நடைபெறும் சடங்குகள் அபரக்கிரியை எனப்படும். (அபரம் / பிந்தியது) இக் கிரியைகள் இறந்தவரின் ஆன்மாவின் நன்மைக்காகச் செய்யப்படுகின்றன. ஆன்மா எப்பிறவி எடுத்திருப் பினும் பிதிர்களின் கிரியைகளின் மூலமாக பயனை அந்த ஆன்மா பெறுகின்றது. பிதிர்கள் பிரமனால் படைக்கப்பட்டவர்களாகும். இக் கிரியைகளைச் செய்பவர்கள் தன தானிய சம்பத்து, புத்திர லாபம் முதலிய ஐஸ்வரியங்களைப் பெற்று வாழ்தலுடன் மறுமையில் நற்கதியையும் அடைவார்கள். அவர்களுக்கு தீவினையும் வறுமையும் இடரும் நீங்கும். செய்யாது விடின் ஏழு பிறப்பிலும் பிதிர் தோஷம் ஏற்படும்.

அபரக்கிரியையில் சூர்ணோத்ஸவம், தகனம், அஸ்தி சஞ்சயனம் (காடாற்று), அந்தியேட்டி, பாஷாணபூசை (கல்வெட்டு), ருத்திர பலி (பிரபூதபலி) நவசிராத்தம், ஏகோத்ரவிருத்தி சம்கிதை, இடபதானம் வைதரணிகோதானம், சபிண்டீகரணம் (வீட்டுக் கிரியை), சிராத்தம் முதலிய கிரியைகள் நடைபெறுகின்றன.

இவற்றில் விசேட அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டி ஆகியவை பிரேதத்திலேயே (கட்டையிலே) தகனத்திற்கு முன்னர் நடைபெறும். மச்ச மாமிச போசனமற்ற நாலாம் வருணத்தாருக்கும் பிரேதத்தில் சமய அந்தியேட்டி தகனத்திற்கு முன் செய்யப்படும்.

மேற்குறிப்பிட்ட கிரியைகளைக் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்த ஆசாரியரைக் (குரு) கொண்டு செய்விக்க வேண்டும். இவற்றைச் செய்விப்பவர்களும் (கர்த்தா) கிரியைகளின் தத்துவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் அவற்றின் பலன்களையும் அறிந்து பக்தி சிரத்தையுடனும் அன்புடனும் செய்தால் நன்மை பயக்கும். இக் கிரியைகளில் பல தானங்கள் செய்யப்படுகின்றன. தானம் என்பது நற்பயன் குறித்துச் செய்யப்படுபவை, எனவே இத்தானத்தை சற்பாத்திரருக்கு (கல்வி, அறிவு, ஒழுக்கமுற்றவர்) செய்தால் தான் குறித்த பயனைப் பெறலாம்.

நாலாம் வருணத்தாருக்கு சைவாகம விதிப்படியே சைவக் கிரியைகள் நடைபெற வேண்டியது. எமது அபரக்கிரியையில் சூர்ணோத்சவம் தொடக்கம் பாஷாண பூசை வரையுள்ள கிரியைகளை சைவ ஆசாரியார்களும், சபிண்டீகரணம் சிரார்த்தம் முதலிய கிரியைகளை பிராமண ஆசாரியார்களும் செய்து வைக்கிறார்கள்.

இக்கிரியைகளின் ஏற்படும் சந்தேகங்களை நூலறிவு அனுபவம் உள்ள ஆசாரியார் சிலரிடமே கேட்டு அறியமுடிகின்றது. இக்கிரியைகள் பற்றிய நூல்களும் இன்று கிடைப்பது அரிது. இக்கிரியைகளின் தத்துவங்களையும் விளக்கங்களையும் சாதாரண கல்வியறிவுடைய எவரும் வாசித்து விளங்கிப் பயன் அடைய முடியுமென்ற முறையில் இக்கட்டுரை அமையுமென நம்புகிறேன்.

சமய தீட்சை பெற்ற நாலாம் வருணத்தாருக்கும் முப்பது நாள் ஆசௌசமுடையவர்களுக்கும் உரிய கிரியைகளையும் அதன் தத்துவங்களையும் விளக்கங்களையும் ஓரளவு இக்கட்டுரையில் விளக்கிக் காட்டியுள்ளோம். கிரியை செய்யும் முறைகள் அவற்றிற் குரிய மந்திரங்கள் ஆகியவை இக்கட்டுரையில் இடம் பெறவில்லை.

ஒருவர் நோய்வாய்ப்பட்டு அல்லது வயோதிபமடைந்து மரணப்படுக்கையில் இருக்கும் பொழுது அவரது பாவங்கள் நீங்கி நற்கதி அடையும் பொருட்டு கோ (பசு) தானம் செய்யப்படவேண்டும். இதனை உத்திராந்தி தானம் என்பர். இது உயிர் உடலை விட்டுப் பிரியும் போது செய்யும் கிரியையாகும். பின்னர் திருமுறைகள் ஓத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறு அணிவித்து புண்ணிய தீர்த்தம் அல்லது பால் பருக்கி காதில் பஞ்சாட்சர மந்திரம் ஓதவேண்டும். மரணித்தவரை குளிப்பாட்டி அலங்காரம் செய்து, தர்ப்பைப்புல் பரப்பி தெற்குப்பக்கம் தலைவைத்துக் கிடத்தல் வேண்டும். தலைப்பக்கம் விளக்கேற்றி வைக்கவேண்டும்.

## மரணச்சடங்கு - சூர்ணோத்சவம்

தந்தை தாயாருக்கு மூத்த புதல்வனே கிரியை செய்ய வேண்டும். தந்தைக்கு சிரேஷ்ட புத்திரனும், தாயாருக்கு கனிஷ்ட புத்திரனும் கிரியை செய்யும் வழக்கம் உண்டு. புத்திரர் தவிர்ந்த பின் வருவோரும் கிரியை உரிமை உடையவர். 1) புத்திரன் 2) மனைவி 3) மகள் 4) தமையன் 5) இளையசகோதரர்கள் 6) சகோதரன் புதல்வன் 7) பிதா 8) மருமகன் 10) சகோதரி புத்திரன் 12) பிதாவழிச் 13) சமானோதகன் 14) தாய்வழிச் சபிண்டன் 15) தாயின் னோதகன் 16) சீடன் 17) குரு 18) மகள் கணவன் 19) தோழன் அரசன் இவர்களுள் புத்திரனே பிரதான மானவன். பிரதானகர்த்தா அடுத்தவர் வரிசையாகப் பிரதானமானவர். சில 32 பேர்கள் கூறப்பட்டுள்ளன. புத்திரன் அல்லாத ஒருவர் தாமாகக் கிரியை செய்வதாகில் அவர் தனது பெற்றோரில் எவருக்காவது கிரியைசெய்தவராக இருத்தல் வேண்டும்.

புத்திரர் இங்கில்லாத காரணத்தினால் மரணக்கிரியை வேறு அசௌச வழியிலுள்ளவர் ஒருவர் செய்தால், புத்திரர் பின்னர் வருவாராகில் எஞ்சிய கிரியைகளைப் புத்திரர் செய்யலாம். அதே புத்திரர் மரணக்கிரியைகளை செய்து மற்றைய கிரியைகளுக்கு முடியாது விட்டால் மற்றைய கிரியைகளை வேறு ஒருவர் இருந்து செய்யலாம். ஆனால் இவரையும் ஆரம்பக் கிரியையிலேயே கர்த்தாவுடன் சேர்த்து கிரியைகள் செய்யவேண்டும்.

அந்தியேட்டி கிரியை மாத்திரம் 21 நாட்களுக்கு மேலும் 31 நாட்களுக்குள்ளும் செய்யலாம். புத்திரர் வெளியூர் போகவேண்டும் என்பதற்காக இத்தினங்கட்கு முன்னதாக அந்தியேட்டி சபிண்டீகரணம் முதலியவற்றை செய்யமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணக் கிரியை நடைபெற உள்ள இடத்தில் மண்டபம் அமைத்து வெள்ளைகட்டி, மாவிலை, தோரணம், பூச்சரம், முதலியவற்றால் அலங்கரித்து அந்த இடத்தை கோமயத்தினால் மெழுகவேண்டும்.

மரணக்கிரியையில் சூர்ணோத்சவம் செய்யப்படும். நடுவில் ருத்திர கும்பமும் அதனைச் சுற்றி அட்டதிக்குப் பாலகர் கும்பமும், மேற்குப் பக்கத்தில் புண்ணியாகவாசன கும்பமும், கிழக்குப் பக்கத்தில் உரல், உலக்கை, பேரிக்கு பதிலாக மணி மயானத்துக்குக் கொண்டு செல்லும் மண்குடக் கும்பம் ஆகியவை வைக்கப்படும். இக்கும்பத்தை மயானத்திற்குக் கொண்டு செல்வது வழக்கமாகவுள்ளது. குரு உரிய கிரியைகள், பூசைகள் வழிபாடுகள் செய்வார்.

அபிஷேகம் முதலியன செய்யும் பொருட்டு பிரேதத்தை வீட்டின் தென்புறத்தில் வடக்கு நோக்கி (தெற்குப் பக்கம் சிரசாக) கிடத்த வேண்டும். பின்னர் கர்த்தா அரப்பு எண்ணெய் முதலியன வைப்பவர்கள். பின்னர் அரிசிமா, மஞ்சள்மா, அபிஷேக கூட்டு (ஆமலகம்) பால், தயிர், இளநீர், முதலியவற்றால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா மேற்கு முகமாக நின்று சங்காரக்கிரமமாக அதாவது கீழிலிருந்து மேலாக கர்த்தாவின் புறங்கையினால் வேறு ஒருவர் உதவியுடன் இவ்வபிஷேகம் நடைபெறுதல் வேண்டும். பின்னர் கும்ப அபிஷேகம் நடைபெறும். அதாவது பன்னிர் போன்ற வாசனைப் பொருட்கள் முதலியவற்றைச் சிரசிலே சாத்த வேண்டும். பின்னர் பிரேதத்தை அலங்கரித்து மண்டபத்திற்குக் கொண்டு வந்து தெற்குப் பக்கமாக தலையை வைத்து திருநீறு சங்காரக் கிரமமாக சாத்த வேண்டும். பின்னர் சுண்ணம் இடிக்கப்படும்.

அறுகு, மஞ்சள்பொடி, என்பனவற்றை உரலில் இட்டு பேரிக்குப் பதிலாக மணியடித்து 81 பத மந்திரம் சொல்லி எட்டு தரம் இடித்து பின்பு திருப்பொற் சுண்ணப் பாட்டுப்பாடி, சுண்ணமிடிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் சுண்ணப்பொடியை கர்த்தா பிரேதத்தின் இரு கண்களிலும் சாத்தி நீருடன் சேர்ந்து பிரேதத்தின் முழு உடலிலும் தெளித்தல் (புரோட்சித்தல்) வேண்டும். இது தற்காலம் நடைபெறும் முறையாகும். (சுண்ணமிடித்து சுண்ணப் பொடியும் சேர்த்து பிரேத அபிஷேகம் நடைபெற வேண்டும் என்பது சாஸ்திர விதியாகும்)

பின்னர் பெண்கள் வாய்க்கரிசி இட்டு பிரேதத்தின் வாய், கை, கால், விரல்கள் ஆகியவற்றைக் கட்டி பூத உடலை வஸ்திரத்தால் மூடிக்கட்டி பாடையில் வைத்து கால் முன்பக்கமாக மயானத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். கர்த்தா நெருப்புச் சட்டியுடன் பூத உடலுக்கு முன்பாகவும், ஆசௌச மில்லாதவர் பின் செல்லல் கூடாது. மயானத்தை அடைந்து தெற்கே சிரசாக முதலில் தலைப்பக்கமும் பின்னர் கால் பக்கமுமாக இறக்குக. மயானத்தில் வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி அதன் மேல் பூத உடலை வைத்து சுற்றத்தார் வாய்க்கரிசி போடுதல் சிதையை (அப்பிரதட்சணமாக) இடப்பக்கமாகச் சுற்றிவந்து குடத்தைத் தலைப்பக்கத்தில் வைத்து கும்பஜலம், அரிசி, சொர்ணம் (பவுண்) அல்லது காசுடன் வாய்க்கரிசியிட்டு பின்னர் குடத்தை முன்போல இடத்தோளில் வைத்து கொள்ளியைக் கையில் கொண்டு சிதையை இடப்புறமாக மூன்று முறை சுற்றிவர வேண்டும். ஒவ்வொரு சுற்றுக்கும் குடத்தில் கத்தி நுனியால் துவாரமிட்டு குடநீர் ஒழுகும்படி செய்து மூன்றாவது சுற்று முடித்து தலைப்பாகத்தில் தெற்கு முகமாக நின்று பின்பறமாக பிரணவம் சொல்லிக் கொள்ளியை பிரேதத்தின் சிரசில் வைத்து குடத்தை முன்புறமாக உடையும்படி போட்டுவிட்டு, பின்பு கால் மாட்டில் சென்று பவித்திரம், பூணூல் ஆகியவற்றை சிதையில் போட்டு (தனக்கு மூத்தவராகில்) விழுந்து நமஸ்கரித்து திரும்பிப் பாராமல் செல்ல வேண்டும்.

மரணித்தவரும், கர்த்தாவும் மச்ச மாமிச போசனம் இல்லாதவர்களாயின் இறந்தவருக்கு உடன் மயானத்திலே அந்தியேட்டிக் கிரியை செய்து தகனம் செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தி சஞ்சயனம் - காடாற்று - சாம்பல் அள்ளல்

தகனத்திற்கு அடுத்த நாள் அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாள்கள் ஒன்றின் அஸ்தி சஞ்சயனம் செய்க. தகனம் செய்யப்பட்ட இடத்தை கால் பக்கமாக இருந்து தலைப்பக்கமாக தண்ணீர் ஊற்றி அக்கினியை அணைக்கவும், தலைப் பக்கத்தில் விளக்கேற்றி கும்பம் வைத்து பூசை அபிஷேக திரவியங்களை வைக்கவும், மண்கலசத்தில் பால் ஊற்றி அதை தலைப் பக்கத்தில் ஒரு முக்காலியில் வைக்கவும். தகிக்கப்பட்ட உடல் எலும்பு மேனியில் (சங்காரக் கிரமமாக) அபிஷேக திரவியங்களால் அபிஷேகம் செய்க. கர்த்தா மேற்கு நோக்கி நின்று புறங்கையால் இன்னொருவரின் உதவியுடன் அபிஷேகம் செய்ய வேண்டும். பின்னர் முழங்கால்கள் (சத்தியோசாதம்) நாபி (வாமதேவம்) மார்பு (அகோரம்) நெற்றி (தற்புஷ்பம்) தலை (ஈசானம்)ஆகிய ஐந்து இடங்களிலும் விபூதி, சந்தனம், புஷ்பம், வைத்து தூபதீபம் காட்டி பூசித்து மேற்குறிப்பிட்ட ஐந்து இடங்களிலும் உள்ள எலும்புகளில் ஒவ்வொன்றையும் கிரமப்படியே எடுத்து தலைமாட்டில் உள்ள பாலுள்ள கலசத்தில் வைத்து அக்கலசத்தை வஸ்திரத்தால் மூடவும். பின்னர் மிகுதி எலும்புகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு கடகத்தில் எடுத்து வைக்கவும். பின்னர் அவ்விடத்தைச் சுத்தம்செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து நெற்பொரி, மாஅடை, தாம்பூலம், பழம் முதலியவை களைப் பூதப் பிரேத பைசாசங்களின் பொருட்டுப் பலியிட்டு, முன்னர் கலசத்தில் எடுத்த அஸ்தி சாம்பலையும் புண்ணிய தீர்த்தம், சமுத்திரம் ஆகியவற்றில் கர்த்தா வடக்குமுகமாக நின்று தெற்குப் பக்கமாக போட்டு கரைத்து விடவும். பின்னர் கர்த்தா அந்த நீர் நிலையில் ஸ்நானம் செய்து அங்கு நக்கினப் பிரச்சாதனம் என்னும் நக்கின தானம் செய்யவேண்டும். ஒரு குடத்தில் பச்சை அரிசியை நிரப்பி அக்குடத்தைச் சுற்றி வஸ்திரம் கட்டி வெங்கலப் பாத்திரத்தில் (விளக்கு) நெய்யூற்றி குடும்பஸ்தராக உள்ள சிவப்பிராமணருக்கு பரம சிவனைத் தியானித்துத் தானமாகக் கொடுக்கவும். இறந்தவரின் நிருவாணம், பசி, தாகம் இருள்களை நீக்கும் பொருட்டு இத்தானம் செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்தியின் ஒரு பகுதியை அந்தியேட்டிக் கிரியைக்காகவோ அல்லது காசி கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் கரைப்பதற்காகவோ எடுத்து வைப்பது தவறாகும்.

## எட்டுக் கிரியை

இக்கிரியை பற்றி பத்திரிகைகளிலோ, ஆகமங்களிலோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இது ஒரு நாட்டு வழக்கமாக வந்துள்ளது. தகனதினம் தொடக்கம் சபிண்டீகரணம் வரை இறந்தவரது படத்தை வீட்டில் ஒரு இடத்தில் வைத்து விளக்கேற்றி, தண்ணீர், இளநீர், வைத்து தாம் உண்ணும் உணவில் ஒரு சிறுபகுதியை அங்கு படைத்து தூபதீபம் காட்டி பூசித்து வரும் வழமை உண்டு. அஸ்தி சஞ்சயனத்தின் பின் எட்டாம் நாளுக்கு முன்னர் ஒரு தினத்தில் இறந்தவர் விரும்பிச் சாப்பிட்ட எல்லாப் பண்டங்களும் (உண்பன, தின்பன, பருகுவன) படைத்து தூபதீபம் காட்டி பூசித்து எட்டுக் கிரியையை முடிப்பார்கள். (சில ஊர்களின் மச்சமாமிசம் உண்பவர்களாக இருப்பினும் அந்தியேட்டி முடியும் வரை, மச்ச, மாமிசம் படைப்பதில்லை) அசௌசகாரர்கள் அங்கு சாப்பிடுவார்கள். (இவை பிரபூதபலி என்ற கிரியைக்கு சமனாக நடைபெறுகிறது)

## அந்தியேட்டி - கல்லெடுப்பு

அந்தியேட்டி சமய அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டி என மூன்று வகைப்படும். இங்கு சமய அந்தியேட்டி பற்றிய விபரங்களே தரப்படுகின்றன. விசேட அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டி பிரேதத்தில் (கட்டையில்) தகனத்திற்கு முன்னர் செய்யப்படும். மச்சமாமிசம் புசியாதவர்கட்கும் சமய அந்தியேட்டி பிரேதத்தில் செய்யப்படும். அந்தியேட்டி இறந்த 21 ஆம் நாளின் மேல் 31 ஆம் நாள்களுக்குள் செய்யலாம். புத்திரன் அல்லாத வேறு ஒருவர் கர்த்தாவாக இருப்பின் சுப நாள் பார்த்து அந்தியேட்டி செய்யவேண்டும். நதிக்கரை, குளக்கரை, நந்தவனம், வீடு ஆகிய இடங்களில் அந்தியேட்டி செய்யலாம். அந்தியேட்டி என்பது இறுதியிற் செய்யும் யானகம் எனப்பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேதசரீரத்திற்குப் பதிலாக தர்ப்பையினால் புத்தலிகா செய்யப்பட்டு அந்தியேட்டிக்கிரியை செய்யப்படும்.

சூர்ணோத்தவக்கிரியை எல்லாம் முடித்து புத்தலிகாவை தகனம் செய்வார்கள். இதைப் புனர்த்தகனம் எனக் குறிப்பிடுவர். பின்பு அங்கு பாஷாணம் (கல்லு) ஸ்தாபித்து அதற்கு அபிஷேகம் பூசை முதலியன செய்து தர்ப்பணம், பிண்டம், ருத்ரபலி, பிரபூதபலி (முன்னர் எட்டுக்குச் செய்தது போன்று) செய்யப்படும். இங்கு 30 பிண்டங்கள் இடப்படும். இப்பிண்டங்கள் பச்சை அரிசிச்சாதம், கறி வகைகள், பலகார வகைகள், பழவகைகள், பட்சணங்கள் ஆகியவை சேர்த்துப் பிசைந்து உருட்டி இடவேண்டும். வாஸோதகம் (சீலையோடு சேர்த்துத் தர்ப்பணம்) கிலோதகம் (எள்ளோடு சேர்த்துத் தர்ப்பணம்) செய்யப்படும். இங்கு 525 தர்ப்பணம் செய்யப்படும். இவை எகோத்திர விருத்தி என அழைக்கப்படும். ருத்திரபலி சிவப்பிரீதியின் பொருட்டு செய்யப்படுவது. பின்னர் பாஷாணத்துக்கு தூபதீபம் காட்டி பூசை முடித்து, கும்பம், பாஷாணம், பிண்டம் ஆகியவற்றை அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் வைத்து மங்கல வாத்தியத்துடன் எடுத்துச்சென்று நீர் நிலையடைந்து பிண்டத்தை ஒருவரும், அவர்பின் கும்பத்தை ஒருவரும் அவர்பின் பாஷாணத்தை ஒருவருமாக எடுத்துச்சென்று கர்த்தா இடுப்பளவு தண்ணீரில் வடக்கு முகமாக பிண்டத்தை முன்னும், பின்னர் கும்பத்தை வடக்குப் பக்கமாகவும் பாஷாணத்தை தலைக்கு மேலாகவும் தெற்குப் பக்கமாக ஜலத்தில் விட்டு ஸ்நானம் செய்து, வீட்டு வாசலை அடைந்து வேப்பிலை தின்று, அக்கி, சாணம், மண், வெண்கடுகு ஆகியவற்றை ஸ்பரிசித்து (தொட்டு) கல்லின் மேல் கால் வைத்து (வீட்டிற்குள் செல்லவும், கர்த்தாவுக்கு ஆரத்தி எடுப்பதும் உண்டு. உலக்கையைக் கடந்து செல்லும் வழக்கம் உண்டு. இவை வைதீகக்கிரியை முறையாகும்)

## வீட்டுக்கிரியை - சபிண்டீகரணம்

வீடு கழுவிச் சுத்தம்செய்து புண்ணியாகவாசனம் செய்த பின்னர் வீட்டுக் கிரியை செய்யவேண்டும். அந்தியேட்டிக் கிரியை முப்பதாம் நாளும், வீட்டுக்கிரியையை முப்பத்தொராம் நாளும் நம்மவர்கள் செய்வது வழமையாக உள்ளது. எமக்கு ஆசௌசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது நாள்கள். அதாவது முப்பத்தொராம் நாள் காலையில் தான் ஆசௌசம் நீங்கும்.

அதன் பின்னர்தான் புண்ணியாகவாசனம் செய்யவேண்டும். முப்பதாம் நாள் அந்தியேட்டி செய்து அன்று புண்ணியாகவாசனம் செய்து வீட்டுக்கிரியை சமையல் ஆயத்தங்கள் செய்யமுடியாது. எனவே முப்பத்தோராம் நாள் புண்ணியாகவாசனம் செய்து முப்பத்திரண்டாம் நாள் வீட்டுக்கிரியை செய்யலாம். (முப்பத்தோராம் நாள் அந்தியேட்டி செய்து அன்று மாலை புண்ணியாகவாசனம் செய்வதும் நல்லது)

வீட்டுக்கிரியை பிராமண ஆசாரியரைக் கொண்டு செய்தல் வேண்டும் தானம் ஏற்கும் தகுதி பிராமணருக்குத்தான் உண்டு. விக்கினேஸ்வரன் பூசை, புண்ணியாகாவாசனம், பஞ்ச கவ்விய பூசை முதலில் கிரியைகளைச் செய்து நவசிரார்த்தம், ஏகோத்திர விருத்தி, சம்கிதை, இடபதானம் ஏகோதிட்டம், மாசிகங்கள், சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம் ஆகிய கிரியைகள் நடைபெறும்.

## நவசிரார்த்தம்

நவம் - புதியது; ஒன்பது எனவே முதலில் செய்யவும் சிரார்த்தம், நவசிராத்தத்தால் பிரேதத் தன்மை நீங்கும், சந்தனம், புஷ்பம், தூபதீபமின்றி பச்சை அரிசி, காய்கறி வகைகள் தானம் செய்வது நவசிரார்த்தமாம். தானங்கள் ஒன்பது ஆகும்.

## ஏகோத்தம் விருத்தி

இதை இங்கு இரணிய தாகமாகச் செய்யவும் - விபரம் அந்தியேட்டிக் கிரியையில் சொல்லப்பட்டுள்ளது.

## சம்கிதை - சங்கிதை சிரார்த்தம்

இச் சிரார்த்தம் செய்வதால் தீட்சை பெற்றுக்கொண்டபின் ஆசாரத்தில் வந்த குற்றம் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடபதானம் - இடபோத்சர்ணம்

எருதுக்கு அலங்காரம் செய்து அதனைப் பூசித்து தானம் செய்தல், இறந்தவருடைய தானதரும பலன்களை தரும வடிவிலான இடபத்தின் மூலம் சிவபெருமானிடத்தில் சேர்ப்பித்தல். ஆன்மாவை இறைவனது திருவருள் வழியின் கண் நிற்குமாறு செய்தலாகும். இடப தானத்திற்கு எருது கொடுக்க வசதி இல்லாதவர்கள் ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதிலே இடபதேவரை ஆவாகனம் செய்து பூசித்து வழிபாடு செய்த பின்னர் கர்த்தாவானவர் தமது இருகரங்களாலும் இடபதேவரைப் பற்றி ஒவ்வொரு திக்கிலும் கொண்டு சென்றதாகப் பாவித்து அதற்குரிய மந்திரங்களைக் கூறி வழிபாடு செய்து அதனை தட்சணை முதலியவற்றுடன் தானமாகக் கொடுக்கவும்.

## ஏகோதிட்டம்

இது இறந்தவரைக் குறித்துச் செய்யப்படும் தானமாகும். சற்பாத்திரரான ஒரு குருவை மேற்கு முகமாக இருக்கச்செய்து, ஆசனம் கொடுத்து, சந்தனம், புஷ்பம், எள்ளு ஆகியவை கொடுத்து உபசாரங்கள் செய்து கர்த்தாவின் சக்திக்குத் தக்கவாறு தானங்கள் கொடுக்கவேண்டும். ஏகோதிட்டத்திற்கு இருபத்துநான்கு தானங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன, பவித்திரம், பூணூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை, (மிதியடி), தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம், (சால்வை) வஸ்திரம், பொன், மோந்திரம், ரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருள்கள், சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருள்கள் தாசீ தாசர்கள். இவற்றில் சிலவற்றை இரணியதானம் (காசு) ஆகவும் கொடுக்கலாம். பின்னர் ஏகோதிட்டத்திற்கு ஒரு பிண்டமிட்டு அதற்கு சந்தன பத்திர புஷ்பம் சாத்தி தூபதீபம் காட்டி பூசிக்கவும், ஏகோதிட்டக் குருவை வழியனுப்பி அந்த இடத்தைத் சுத்தி பண்ணி கர்த்தா ஸ்நானம் செய்யவேண்டும். ஆசாரியார் மீண்டும் புண்ணியாகவாசனம் செய்து பஞ்சகவ்வியத்தினாலே தன்னையும் கர்த்தாவையும் இடத்தையும் பொருள்களையும் சுத்தம் செய்து கொள்வார். ஏகோதிட்டம் ஏற்கும் குருவை இறந்தவராக வரித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதினால் அங்கு ஆசௌசம் ஏற்படுகின்றது. இதனாலேதான் மேற்கூறியவாறு சுத்திகள் செய்யப்படுகின்றன.

## மாசிகங்கள்

மாசிகங்கள் முதல் வருடம் முழுவதும் இறந்த திதியின் செய்யப்படும் சிரார்த்தமாகும். ஏகோதிட்டத்தோடு முதல் மாசிகம் முடிவுற்றதாகக் கருதப்படும். எஞ்சியிருப்பது பதினொரு திதியில் வரும் மாசிகமாகும். இவற்றுடன் இடைக்கால மாசிகங்கள் நான்கு சேர்ந்து பதினைந்து மாசிகங்கள் கொள்ளப்படும். இறந்த திகதியிலிருந்து 27ஆம் நாளுக்கு மேல் 30ஆம் நாளுக்குள் செய்வது ஊன மாசிகம். 40 நாள்களுக்கு 45ஆம் நாள்களுக்குள் செய்வது ஊனதிரிபட்ச மாசிகம். 170ஆம் நாள்களுக்கு மேல் 180ஆம் நாள்களுக்கிடையில் செய்வது ஊனஷான மாசிகம். 350ஆம் நாள்களுக்கு மேல் 365ஆம் நாள்களுக்கு செய்வது ஊன ஆப்திக மாசிகம். இந்த இடைக்கால நான்கு மாசிகங்கட்கும் திதி நியமம் கொள்ளப்படுவதில்லை. செய்யும் தினம் சுபதினமாக இருக்க வேண்டும். இந்தப் பதினைந்து மாசிகங்களையும் ஒன்றுசேர்த்து ஏகோதிட்டத்திற்குப் பின்னர் செய்வது வழக்கம். மாசிகதானம் செய்து ஒரு மாசிகத்திற்கு ஒரு பிண்டமாக பதினைந்து பிண்டமிட்டு சந்தனம், பத்திர புஷ்பம் சாத்தி, தூபதீபம் காட்டிப் பூசித்து தர்ப்பணம் செய்யவேண்டும். மேற்குறிப்பிட்டபடி 15 மாசிகங்களையும் ஒன்றாகச் செய்தாலும் அந்த மாசிகங்களை மாதாந்தம் அந்தந்த திதியில் செய்வது முறையாகும். சபிண்டீக்குப் பின் மாதா மாதம் செய்யப்படும் மாசிகங்கட்கு நிமித்தர் பிண்டம் தேவையில்லை. பிதிரர்களுடன் ஒன்றாகவே கொண்டு மூன்று பிண்டம் இடுக.

## சோதகும்பசிரார்த்தம் - சொர்க்காபாதேயம்

நீர் நிறைந்த பாத்திரத்தை அன்னத்துடன் தானம் செய்யவும் இச்சிரார்த்தத்தால் பசி, தாகம், தீரும்.

## வைதரணி கோதானம்

பசுவை தானமாகக் கொடுக்கவும். இது இரணிய தானமாகவும் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபிண்டீகரணம்

சபிண்டீகரணம் செய்வதன் பொருள் ஆத்மாவின் பிரேதத் தன்மை நீங்கி பிதிர்த்துவ தன்மை அடைதலாகும். அதன் மூலம் இறந்த உயிர் தன் பிரேதத்துவ தோஷம் முற்றாக நீங்கி பிதிர் தத்துவத்தை அடையினும் அடையும். அல்லது தேவத்துவமடை யினும் அடையும். தனக்குத் தகுதியுண்டேல் சிவத்துவத்தை அடையும். இக்கிரியையில் தேவர் பொருட்டு நந்தி, மாகாளர் என இருவரும் பிதிரர் பொருட்டு கந்தர், சண்டர், கணாதீசர் என மூவரும் அதிதி, அப்பியாகதர் என இருவரும் நிமித்தர் ஒருவரும் (இறந்தவர் பொருட்டு நியமிக்கப்படுபவர்) ஆகிய எண்மர் சபிண்டியில் அமர்த்தப்படுபவர், தேவர் இருவரும் மேற்குப் பக்கத்தில் வடக்கு முகமாகவும், நிமித்தர் கிழக்குப் பக்கத்தில் மேற்கு முகமாகவும் மற்றைய இருவரும் நிமித்தருக்கு வடக்கே மேற்கே முகமாகவும் அமர்த்தப்படுவர். இவர்களுக்கு ஆசனம் கொடுத்து உபசாரங்கள் செய்து பூசைகள் முடித்து தானங்கள் கொடுத்து பின்னர் சபிண்டீகரணம் நடைபெறும். குறிப்பிட்ட உபசாரங்கள் பூசைகள், தேவர்கள் பொருட்டு இருத்தப்பட்ட குருமாருக்குச் செய்யும் பொழுது கர்த்தா பூணூலை வலது பக்கமாக அணியவேண்டும். பிதிரர்களுக்கு பூசை செய்யுமிடத்து இடது பக்கமாக பூணூல் அணியவேண்டும். சபிண்டியில் பிண்டதானம் ஒருமுக்கிய அம்சமாகும். வாழையிலையை தெற்கு துனியாகப்போட்டு தெற்கு நுனியாகப் இரு தர்ப்பைகள் வைத்து மேற்குப் பக்க தர்ப்பையில் இறந்தவர் தந்தையாகில் பிதா, பாட்டன், பூட்டன், ஆகியோருக்கும், கிழக்கு பக்கத் தர்ப்பையில் இறந்தவருக்காக (நிமித்தர்) பெரிய அளவு பிண்டம் இடவேண்டும். இறந்தவர் தாயாராகில் இதே போன்று தாய், பாட்டி, பூட்டி, ஆகியோருக்கு பிண்டம் இடவேண்டும். பிண்டம் நோக்கி தர்ப்பணம் இடவேண்டும். பின்னர் பிண்டத்திற்கு மஞ்சள், சந்தனம், பத்திரபுஷ்பம் முதலியன சாத்தி தூபதீபம் காட்டி பூசிக்க வேண்டும்.

நைவேத்தியங்கள் வைத்து பூசை வழிபாடு செய்து திருமுறை ஓதி சரமகவிபாடி, தர்ப்பணம் செய்து கர்த்தாவும் உறவினர்களும் வணங்கி முடிவில் நிமித்த பிண்டத்தில் சாத்தப்பட்ட பத்திர புஸ்பங்களை எடுத்து பிதிரர் பிண்டத்தோடு சேர்த்தல் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த நிமித்தர் பிதிரர்களோடு ஒன்றானார் என்று கருதப்படுகிறது. நிமிந்த பிண்டத்தை மூன்று பகுதியாக பாகம்செய்து பிதிரர் பிண்டங்களுடன் தனித்தனி சேர்க்கும் முறையும் உண்டு. சபிண்டியில் தகப்பன் அல்லது தாய் பிள்ளைகளுக்குச் செய்தாலும், தமையன் தம்பிக்குச் செய்தாலும், தாய்மாமன் மருமகளுக்குச் செய்தலுமாகிய மூத்தோர் இளையோருக்கு பிண்டம் இடும்பொழுது நிமித்தர் பிண்டம் மாத்திரம் இட்டுக் கிரியைகளை முடிக்குக.

பச்சை அரிசிமா, உழுத்தம்மா, பால், தயிர், நெய், தேன், எள்ளு இவை பிண்டத்திற்குச் சேர்க்கப்படும் பொருள்களாகும்.

இங்கு ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். புத்திரன் புத்திரி அல்லாத ஒருவர் கிரியை செய்தால் பிண்டம் போடும் பொழுது இறந்தவருக்கு (பிதிரருக்கு) மட்டும் பிண்டம் போடவேண்டும். இது ஏகோதிட்டவிதானம். பிதா, பாட்டன், பூட்டன் ஆகியோருக்கு பிண்டம் போடக்கூடாது. புத்திரன், புத்திரி பிண்டம் போடும் பொழுது பாட்டன், பாட்டி, உயிருடன் இருந்தால் அவர்கட்கு பிண்டம் போடக்கூடாது. ஆசாரியருக்கு பாட்டன் பாட்டி உயிருடன் இருக்கும் விடயத்தைத் தெரிவிக்காது விட்டால் தவறுகள் ஏற்படும்.

கிரியைகள் முடித்த பின்னர் குருமாருக்கு தட்சணை கொடுத்து வணங்கி ஆசீர்வாதம் பெற்று அவர்களை வலமாகப் பின் தொடர்ந்து சென்று வழி அனுப்புக. பிண்டத்தைப் பசுவுக்குக் கொடுக்கவும். அல்லது புண்ணிய தீர்த்தத்திலே போடவும்.

## ஆப்தீக சிரார்த்தம்

இதை ஆட்டைத்திவசம் எனக் கூறுவர். முதலாவது வருட முடிவில் இறந்த திதியிற் செய்யப்படும் சிரார்த்தம். இதில் நிமித்தருக்குப் பிண்டம் இல்லை. இதுவே அபரக்கிரியைகளின் பூர்த்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருட சிரார்த்தம்

வருடாவருடம் இறந்த திதியிற் சிரார்த்தம் செய்யப்படும். சிரார்த்தம் என்பது சிரத்தையுடன் செய்யப்படுவது எனப் பொருள் படும். மகன் தந்தைக்குச் சிரார்த்தம் செய்யும்பொழுது தகப்பன் பேரன், பூட்டன், ஆகிய மூவருக்கும் மூன்று பிண்டங்களை கிழக்குப் பக்கமாக உள்ள தர்ப்பையிலும் வம்சத்திலும் வம்சத்திலுள்ள பிதிரர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டத்தை மேற்குப் பக்கமாக உள்ள தர்ப்பையிலும் இடல்வேண்டும். மகன் தாயாருக்குச் செய்யும் சிரார்த்த்தில் தாய் தகப்பனுடைய தாய், பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கும் மூன்று பிண்டங்களும் வம்சபிண்டம் ஒன்றும் இடுதல் வேண்டும்.

பிள்ளையில்லாத கணவனுக்கு அல்லது மனைவிக்கு இருப்பவர் ஒருவர் சிரார்த்தம் செய்யலாம்.

தாய் தகப்பன் இருவருக்கும் ஒரே தினத்தில் சிரார்த்தம் வந்தால் இரு சிரார்த்தங்களையும் செய்யலாம். (ஆசௌச காரணத்தினால் இப்படி வரலாம்)

மறதியில் சிரார்த்தம் செய்யத்தவறின் வேறு தினத்தில் அச்சிரார்த்தம் செய்யக்கூடாது. எதிர்வரும் அமாவாசைத் தினத்தில் அச்சிரார்த்தத்தைச் செய்யலாம். சிரார்த்தம் கர்த்தாவுக்கு இயலுமான காலம் வரை செய்ய வேண்டும்.

## சிரார்த்தம் செய்யுமிடம்

தன் வீடு, திருநந்தவனம், மலை, புண்ணிய தீர்த்தக்கரை, திருக்கோயில், குருவின்மனை ஆகிய இடங்களில் சிரார்த்தம் செய்யலாம்.

## சிரார்த்தம் செய்யும் காலம்

சூரியன் உதயம் முதல் ஆறு நாழிகை வரை (6.00 - 8.24) பிராதக்காலம், அதற்கு மேல் 12 நாழிகை வரை (8.24 - 10.48) சங்கல காலம், அதற்கு மேல் 18 நாழிகை வரை (10.48 - 1.12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியான காலம். அதற்குமேல் 24 நாழிகை வரை (1.12 - 3.36) அபரான்ன காலம். அதற்கு மேல் 30 நாழிகை வரை (3.36 - 6.00) சாயாரன காலம். மத்தியான காலத்தில் (10.48 - 1.12) ஏகோதிட்டமும் அபரான்ன காலத்தில் (1.12 - 3.36) பிதிர் சிரார்த்தமும் செய்க. (சூரிய உதயம் 6 மணிக்குப்பிந்தினால் அங்ஙனம் பிந்திய நிமிடத்தைக் கூட்டுக.)

## சிரார்த்ததினத்தில் செய்யத் தக்கவைகள்

திருக்கோயிலில் அபிஷேகம், பூசை முதலியவை செய்யலாம்.

## சிரார்த்ததினத்தில் செய்யத் தகாதவைகள்

நெல்குத்துதல், பிச்சையிடுதல், தயிர் கடைதல், நெய் முதலிய பொருள்களை வாங்குதல், கொடுத்தல் முதலியன தகாதனவாம்.

## சிரார்த்தத்திற்குரிய திரவியங்கள்

எள்ளு, பச்சை அரிசி, கோதுமை, பயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுவின் பால், தயிர், நெய், எண்ணெய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, இஞ்சிக் கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், தேங்காய், இளநீர், புடோலங்காய், பயற்றங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சப்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கராம்பு, சாதிக்காய், சாதிபத்தரி முதலியனவாம். (மிளகாய், பூசணிக்காய், கத்தரிக்காய் முதலியன சேர்க்கலாம் எனச் சில நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.)

## ஆகாத திரவியங்கள்

கடலை, பீர்க்கங்காய், நீற்றுப்பூசினிக்காய், சுரைக்காய், கத்தரிக்காய், அத்திக்காய், முருங்கைக்காய், வாழைப்பூ, வெங்காயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைப்பூண்டு, கொவ்வை, எருமை, ஆடு ஆகியவற்றின் பால், தயிர் முதலியனவாம்.

## சிரார்த்த்துக்கு உபயோகமாகும் பத்திர புட்பங்கள்

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவர்த்தம், எள்ளுப்பூ, மருக்கொழுந்து, வெற்றிவேர் முதலியன.

## ஆகாத பத்திர புட்பங்கள்

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ முதலியனவாம்.

## மஹாளயம்

புரட்டாதி மாசத்து அபரபட்சம் (அமாவாசைக்குமுன் 15 நாட்கள்) பிதிரர்களின் திருப்தி வேண்டி இச்சிரார்த்தம் செய்யப்படும். வருடசிரார்த்தம் செய்ய இயலாதவர்கள் மஹாளயமாவது செய்ய வேண்டும். மற்றைய சிரார்த்தங்களிலே ஏற்படும் குறைகளுக்கு இது சாந்தியாக அமையும். தந்தை, தாய் இருவரும் இறந்திருப்பின் இருவருக்குமாக தனித்தனியே பிண்டமிடல் வேண்டும். இது பிதிர்களுக்கு இராப்போசனமாகும்.

அமாவாசை நாளில் விரதமிருந்து பிதிர் திருப்திக்காக எள்ளும், தண்ணீரும் இறைத்தல் தந்தை, தாய் வர்க்கம் இரண்டினுக்கும் இது நன்மை பயக்கும். இவை ஆட்டைத் திதியின் பின் செய்யவேண்டும்.

## தநிட்டா பஞ்சமி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் மரணித்தால் பஞ்சமி தோஷமுண்டு. இறந்த வீட்டில் கும்பம், தீபம், ஜலம் இவைகளை வைத்து பசுமாடு கட்டி வைத்து வீட்டில் நெற்பொரி, நவதானியம் தூவுதல் வேண்டும். அவிட்ட நட்சத்திரத்திற்கு மூன்று மாதமும், பூரட்டாதி நட்சத்திரத்திற்கு ஒரு மாதமும் ரேவதி நட்சத்திரத்திற்கு அரை மாதமும் தோஷமாம் நீங்க பஞ்சமி சாந்தி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்மரணம்

துர்மரணம் அல்லது அவமிருத்து அடைந்தவருக்கு கிரியை செய்யாது தகனம் செய்யவேண்டும். துர்மரணமடைந்தவருக்கு அங்கமெதிலும் குறைவுபடாமலிருந்தால் ஆறு மாதத்தின் மேல் இறந்த திதியிலே அந்தியேட்டி முதலிய கிரியைகளைச் செய்யலாம். அங்கங்களில் குறைவு கண்டிருந்தால் ஒரு வருடத்தின் பின்னர் இறந்த திதியில் கிரியைகள் செய்யலாம். வைரவ சாந்தி செய்து கிரியை செய்யவும்.

## வீரமரணம்

வீரமரணமடைந்தவர்கட்கு இயற்கை மரணம் போன்ற கிரியைகள் செய்யலாம்.

## நாந்தி சிரார்த்தம்

விவாகம் முதலிய சுபகாரியங்கள் நடைபெறும் தினம் அல்லது அதற்கு முன்தினம் பிதிரர்களுடைய ஆசிர்வாதம் பெறும் பொருட்டு இரணியதானமாக (காசு) இவை செய்யப்படும். பிதிர் வழிபாடு செய்யாது எந்த நற் சுபகாரியமும் செய்யக்கூடாது.

## தர்ப்பணம்

வலது கையில் எள்ளையும், தர்ப்பையும் வைத்து வலது கைக்கட்டை விரலுக்கும் சுட்டு விரலுக்கும் நடுவாக விழும்படி தர்ப்பணம் செய்யவேண்டும்.

## பிண்டம் இடுதல்

பிண்டம் இடும் பொழுது கர்த்தா தெற்கு முகமாக முழங்காலை ஊன்றிக் கொண்டிருந்து வலதுகைப் பெருவிரலிடையினால் பிண்டம் இடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசதானம்

இத்தானம் அந்தியேட்டியில் செய்யப்படும் தானமாக வழக்கத்தில் வந்துள்ளது. ஆனால் இத்தானத்தை ஒருவர் உயிருடன் உள்ள பொழுது கொடுப்பது மிகச் சிறந்ததாகும். தசதானம் வருமாறு: பசு, பூமி, எள்ளு, காசு, நெய், வஸ்திரம், நெல்லு, வெல்லம், வெள்ளி, உப்பு இதில் சிலவற்றை இரணியதானமாக கொடுக்கலாம்.

## ஆசௌசம்வரின் செய்யும் விதி

பிறப்பு, இறப்பு ஆசௌசத்திலே சிரார்த்தம் வந்தால் ஆசௌசம் நீங்கும். அதே தினத்தில் சிரார்த்தம் செய்தல் வேண்டும். சிரார்த்தம் தொடங்கிய பின்னர் ஆசௌசம் வந்தால், அச்சிரார்த்தம் முடியும் வரை அது கர்த்தாவைப் பற்றாது.

## சைவருக்கு உரிய ஆசௌசம்

சிவதீட்சையுடையவருக்கு சைவர் என்ற பெயர் உண்டு. சிவதீட்சையுடைய பிராமணரல்லாத ஏனைய மூன்று வருணத்தார் விபூதி, உத்திராக்கம் அணிந்து சிவபூசையுடன் புலால் முதலியவை உண்ணாதவராயும் இருப்பின் அவர்களுக்கு ஆசௌசம் பதினைந்து நாள்களாகும்.

## அபரக்கிரியை பற்றி பொது விடயங்கள்

புண்ணிய தீர்த்தமாடும் காலத்தில் பிண்டதானம், தர்ப்பணம் செய்தபால் பிதிர்களின் ஆசி கிடைக்கும்.

தானங்களுக்கு பச்சை அரிசி கொடுப்பது நன்று. (பிராமணர்கள் புழுங்கல் அரிசி சாப்பாட்டுக்குப் பயன்படுத்தக் கூடாது என்ற வழமையும் உண்டு)

புரோகிதர் அல்லது ஆசாரியர் ஒரு நாளைக்கு ஒரு தானம் தான் பெறவேண்டும். இவர்கள் ஒரு சிரார்த்தம் தான் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபரக்கிரியைகள் செய்யும்பொழுது ஆசாரியர் கர்த்தா ஆகிய இருவரும் இடப்பக்கமாக பூணூல் அணியவேண்டும். பவித்திரம் அணிந்திருக்க வேண்டும். தூபதீபம் இடப்புறமாக (அப்பிரதட்சணம்) காட்டுதல் வேண்டும். கர்த்தா கௌபீனம் தரித்து இரண்டு வஸ்திரம் தரித்திருக்க வேண்டும். தென்புலுத்தாருக்கு செய்யும் கிரியையாவும் தெற்கும் மேற்கும் நோக்கியபடி செய்யவேண்டும்.

மரணக்கிரியையில் ஆசாரியரோ அல்லது கர்த்தாவே உருத்திராட்ச மாலை அணியக்கூடாது.

முக்தித்தலம் ஏழினில் முதலாவது ஆகிய காசித்தலம் சென்று அங்க அபரக்கிரியைகளை அதாவது அந்தியேட்டி முதலியவற்றை உயிருடன் இருக்கும்பொழுது செய்தால் பின்னர் தங்களுக்கு மரணத்தின் கிரியை எதுவும் செய்யத் தேவையில்லை என்று சொல்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

காசியாத்திரை சென்று வந்தவர்கள் சிலர் தங்கட்கு மரணத்தின் பின் கிரியை ஏதும் செய்ய வேண்டாமென்று முன்னமே கூறியதினால் அவர்களுக்கு உறவினர்கள் கிரியைகள் செய்யாது விட்ட சில சம்பவங்களையும் நாம் கேள்விப்பட்டுள்ளோம்.

இவை முற்றிலும் பிழையான கருத்தாகும். அப்படி ஒருமுறை நாம் எந்நூலிலும் இருப்பதாக அறியவில்லை. ஆனால் புண்ணிய நதிகளில் தீர்த்தமாடி பிண்டதானம் தர்ப்பணம் செய்தால் பிதிர்களுக்கு திருப்தி உண்டாகும் என்று நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.

வடஇந்தியா முத்தித்தலங்களில் ஒன்றாகிய கயாவில் பிதிர்களுக்குப் பிண்டம் போடுவது வழக்கம். அங்கு மூன்று இடங்களிற் பிண்டம் போடுவார்கள். அங்குள்ள புரோகிதர்கள் (பண்டாக்கள்) இனி மேல் நீங்கள் உங்கள் பெற்றோருக்குப் பிண்டம் போடத் தேவையில்லை என்று கூறுவது உண்டு. ஆனால் இதுவும் நூலாதாரம் அற்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தகப்பன் இறந்த ஒருவருடத்திற்குள் தலயாத்திரை செய்தல் கூடாது. சுபகாரியங்களும் செய்தல் கூடாது.

இக்கட்டுரை அபரக்கிரியாவிதி, சோமசம்பு, பத்ததி, சைவபூஷணம், ஆகிய நூல்களிலிருந்தும், சைவக் கிரியைகள் பற்றி வெளிவந்த பிறநூல்களிலிருந்தும் தொகுத்து எழுதப்பட்டது.

சிரார்த்தத்துக்கு பொருளில்லாதவன் காய், கனி, கிழங்கு, எள் இவைகளையேனுஞ் சற்பிராமணருக்குக் கொடுத்து நமஸ்காரஞ் செய்து தலதர்ப்பணம் பண்ணிக்கொண்டு தான் திருத்தியாகப் போசனம் பண்ணல் வேண்டும்.

இதிலுள்ள சகல கிரியைகளையும் செய்ய இயலாதவர்கள் தன் உள்ளத்தை ஒரு நிலைப்படுத்தி ஆத்ம சாந்தியை வேண்டிய இறைவனைத் தியானம் செய்தல் நன்று.

## ஓம் சாந்தி

மனமே ஏன் சஞ்சலப்படுகிறாய். எல்லாம் அவன் செயல் நாம் நினைப்பது எதுவுமே நடப்பதில்லை. நன்மை தீமை இரண்டும் சேர்ந்தது தான் வாழ்க்கை. பிறக்கும்போது நாம் எதுவுமே கொண்டு போவதில்லை. உலகமே ஒரு மாயை. நம் வாழ்க்கையில் நடப்தெல்லாம் ஒரு நாடகம் ஆட்டிப் படைப்பவன் அவன். நாம் அதில் பிணைக்கப்பட்டிருக்கின்றோம் நம் விருப்பத்திற்கு உடம்பை எடுத்தோமில்லை. முதலும், முடிவும் நம் கையில் இல்லை. நாம் செய்யத்தக்கது ஒன்று தான். உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். தெய்வம் உண்மை என்று தானறிதல் வேண்டும். இறைவனை அடைய பல வழிகள் உண்டு. எனினும் பக்தி வழியே இலேசான வழி.

இதுவே கீதையின் சிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பின் பின் வரும் பாவ புண்ணியங்கள்

அரிது அரிது இந்த மானிடப் பிறவி அரிது. பிறந்த அனைவருமே என்றாவது ஒரு நாள் இறப்பது நிச்சயம். பிறப்பதும் உண்மை! இறப்பதும் உண்மைதான். இதை உணரும் ஒருவன் நிச்சயம் தனக்குரிய தருமங்களைச் செய்து அறநெறிப்படி வாழ்வானாகில் அந்த அறம் அவனை மறு உலகில் காப்பாற்றும்.

இங்கு அறங்கள் எனச் சொல்லும்போது அவன் பிறந்த குலத்துக்கேற்ற கர்மங்களை முறைப்படி செய்ய வேண்டும். குலங்கள் நான்கு எனச் சொல்லப்படுகின்றது. பிரமம், தைத்திரியம், வைசிய, சூத்திரர் என்பவையே அவை. அவர்களில் பிராமணருக்கு ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்று ஆறு கர்மங்கள் உண்டு. க்ஷத்திரியருக்கு ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படை பயிற்றல், பொருதல் என்று அறுவகைக் கருமங்கள் உள்ளன. வைசியருக்கு ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்களைக் காத்தல், ஏருழல் என ஆறு கர்மங்கள் உண்டு. சூத்திரருக்கு ஓதல், முன்னவர்க்கு பணியாற்றல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், வேட்டல் முதலிய ஆறு கர்மங்கள் உண்டு. அவரவர் குலமரபுக்குரிய ஒழுக்கப்படி நடப்பதே அவரவர்க்கு பெரிய தவமாகும்.

பிறவிகள் அனைத்திலும் மானிடப் பிறவி கிடைப்பது அரிதினும் அரிது. அந்த மனிதப் பிறவியே புண்ணியப் பிறவியாகும். பொருள்களைப் பார்ப்பதற்குரிய கண்களும், விஷயங்களைக் கேட்பதற்குரிய காதுகளும், இனிமையை உணர்வதற்கு நாக்கும், வாசனைகளை அறிவதற்குரிய நாசியும், காமவின் பந்துய்ப்பதற்குரிய மெய்யும் (உடம்பும்), நன்மை, தீமைகளைப் பகுத்து உணர்வதற்கு உணர்வும் இருப்பதால் மானிடப் பிறவியே சிறப்புடையது. இத்தகைய மானிடப் பிறவியை அடைந்து நல்வினைகளைச் செய்து நல் உலகை அடையாமல் தீய செயல்களைப் புரிந்து உயர்ந்த மானிடப் பிறவியை வீணாக்குபவர்கள் தான் உலகில் பலர் இருக்கிறார்கள். மண் ஆசை, பெண்ணாசை, பொருள் ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் மூன்று ஆசைகளால் மயக்கமுற்று மனச்சாட்சிக்கு மாறுபாடான செயல்களைச் செய்பவன் இறந்த பிறகு அவன் ஈட்டிய பொருள் அவனோடு செல்லுமோ என்றால் அது கொஞ்சங்கூடச் செல்லாமல் அவனை விட்டு, விட்டு அவன் வீட்டிலேயே தங்கிவிடும். வீடு வரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை, கடைசி வரை யாரோ? . . . என்ற கண்ணதாசனின் வரிக்கேற்ப ஒருவன் இறந்த பின் உறவினர்கள் அவனது உடம்போடு மயானம் வரை சென்று உடனே தம் வீடு மீண்டு விடுவார்கள். இறப்பதற்கு முன்பு அவனவன் செய்த பாவ புண்ணியங்களே மயானத்தையும் தாண்டி அவனவனுடன் செல்வனவாகும். இதனால் இறக்குமுன் அனைத்து தான தர்மங்களையும் செய்துவிட வேண்டும்.

தான தர்மம் செய்வதற்குத் தகுந்த முறைகள் உள்ளன. ஒருவன் தானம் செய்யும்போது செய்யும் தானம் நல்லதாக இருத்தல் வேண்டும். தானம் வாங்குவோரும் நல்வராக இருத்தல் வேண்டும். தானம் கொடுக்கப்படும் இடமும் தகுந்த இடமாக இருத்தல் வேண்டும். இவை அனைத்தும் சேரும்போது செய்யும் தானம் ஒரு கோடி பயனைத்தரும். கற்றுணர்ந்த சான்றோருக்குக் கொடுக்கப்படும் தானம் நாளுக்கு நாள் விருத்தியடையும். எந்த மனிதனும் தான் வாழுங் காலத்திலேயே தனக்கான தான தர்மங்களைச் செய்து கொள்வது நல்லது. அவ்வாறு தானஞ் செய்ய விரும்புவோனுக்குப் புத்திரன் இருந்தால் அவனிடம் தான் தனக்காகத் தானஞ் செய்ய விரும்புவதைச் சொல்லி அவனுடைய ஒப்புதலைப் பெற்ற பிறகே தானத்தைச் செய்தல் வேண்டும். தந்தை இறந்த பிறகு அவனுடைய புத்திரன் சிரார்த்தம் செய்வதைவிட தந்தை இறக்கும் சமயத்தில் அவன் தன் தந்தையின் அருகிலேயே நெருங்கியிருந்து தான தர்மங்களைச் செய்வது உத்தமமாகும்.

தானங்களில் சிறந்தது அன்னதானமாகும் என்பது தியாகத்தின் அடிப்படையில் அமைந்தது. எந்த ஒரு கர்மாவும் அன்னதானம் இல்லாமல் நிறைவு அடைவதில்லை. அன்னதானத்திற்கு மேலானதொரு தானம் என்றும் இருந்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானத்திற்கு யோக்கியன், அயோக்கியன், நல்லவன், கெட்டவன் என்ற வித்தியாசமில்லை. கால எல்லையும் இல்லை. அன்னம் மறைந்த முன்னோர்களின் ஆசியைப் பெறச் செய்கிறது. பித்ருக்களின் தோஷத்தைப் போக்குகின்றது. நமது வம்சம் வாழ பித்துருக்களின் ஆசி தேவை. மறைந்த முன்னோர்களுக்கு அன்னம் வழங்குவதே உயர்ந்த வழிபாடு, அவர்களை திருப்தி செய்ய அன்னதானம் சிறந்த மார்க்கம்.

அன்னதானத்தை அடுத்து திலகதானமும் கோதானமும் சிறப்பான தானங்களாகும். இவ்விரண்டு தானங்களும் மிகக் கொடிய பாவங்களை நசிக்கச் செய்யும். ஆகையால் இவற்றை வேத சாஸ்திரங்களை ஓதியுணர்ந்த பிராமணர்க்கே வழங்க வேண்டும். மங்கையருக்கும் தனக்கு வேண்டியவருக்கும் இவற்றைச் சாதாரணமாகக் கொடுக்கலாமே தவிர தானமாகக் கொடுக்கமுடியாது. கோதானம் செய்யும்போது ஒரு பசுவை ஒருவனுக்கு மட்டுமே தானம் கொடுக்க வேண்டும். ஒரு பசுவைப் பலருக்குத் தானம் கொடுக்கக்கூடாது. கோதானம் கொடுத்து அந்தத் தானத்தை வாங்கியவர் அதை விற்று அந்தத் தொகையைப் பங்குபோட்டுக் கொண்டாலும், பலர் கூடி ஒருவர் ஒரு மாதம் வைத்திருந்து மற்றொருவர் அடுத்த மாதம் வைத்திருந்து அனுபவித்துக் கொள்வது என்று விதித்துக் கொண்டாலும் தானம் கொடுத்தவன் தனது ஏழு தலைமுறையினரோடு நரகம் புகுவான். மனத்தூய்மை இல்லாமற் செய்யப்படும் நூறு கோதானங்களுக்கு எத்தனை பயன் உண்டோ அத்தனை பயனும் ஒரு பசுவை நல்லவருக்குத் தானஞ் செய்யும்போது கிடைத்துவிடும். ஒருவன் இறந்த பின்பு அவனைக் குறித்துச் செய்யப்படும் இலட்சம் கோதானங்களுக்கு என்ன பயனோ அத்தனைப் பயனும் அவன் இறக்கும் காலத்தில் செய்யும் ஆயிரங் கோதானத்தாலேயே கிட்டிவிடும். நூறு பசுக்களைக் கொன்றுவிட்டு நூறு பசுக்களைத் தானம் செய்தாலும் கூட பசுவைக் கொன்ற பாவமே மேலானதாகும்.

ஒருவன் அன்னதானம் செய்தால் இறந்து செல்லும் ஜீவன் மார்க்கத்தில் வருந்தாமற் செல்வான். தீபதானம் செய்தால் இருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரியில் பிரகாசத்தோடு செல்வான். ஐப்பசி, கார்த்திகை, மாசி ஆகிய மூன்று மாதங்களிலாவது சதுர்த்தசியிலாவது. பௌர்ணமியிலாவது ஒருவன் இறந்த தினத்திலாவது தீபதானம் செய்வது சிறப்பாகும். ஒருவன் இறந்த தினத்திலிருந்து தீபதானம் செய்வது சிறப்பாகும். ஒருவன் இறந்த நாள் முதல் ஓராண்டு காலம் வரையிலும் தீபதானம் செய்தால் இறந்தவன் மேடு பள்ளம் இல்லாத நல்லதொரு வழியாக யமபுரியைச் சார்ந்து, அவனது குலத்தைச் சேர்ந்தவர்கள் யமபுரியில் இருந்தால் அவர்களையும் நல்லுலகம் சேர்த்து தானும் நற்கதியை அடைவான். தீப தானத்திற்குள்ள மதிப்பு சிறிதல்ல. பிரமாலயத்திலும் தேவாலயத்திலும் வடக்கு முகமாகவாவது கிழக்கு முகமாகவாவது தீபம் வைக்க வேண்டும். தீபதானம் செய்பவன் தனக்கு எதிர்முகமாகத் தீபத்தை சுடர் விட்டெரியச் செய்து கொடுக்க வேண்டும். பூமிதானம் செய்தால் பூமியானது எத்தனை அடிகள் ஆழமாக இருக்கிறதோ அத்தனையாண்டுகள் அந்த ஜீவன் சுவர்க்கலோகத்தில் வசிப்பான். தானம் கொடுத்த பூமியை அபகரிக்க முயன்றவனும், தானம் கொடுத்த நிலத்தின் பேரில் ஒருவன் வழக்கிட்டால் தானம் வழங்கியவனுக்கு உதவி செய்தவனும் பிளய காலம் வரையில் நரகவாசம் செய்வார்கள்.

ஒருவன் இறந்ததும் குடை, மாரடி, தண்டம், வஸ்திரம், மோதிரம், உதக கும்பம், ஆசனப் பலகை, அன்னம் பூஜைத் திரவியம், பூநூல், தாமரிச் செம்பு, அரிசி ஆகியவற்றை பிராமணருக்குத் தானமாகக் கொடுக்க வேண்டும். குடை தானம் செய்தால் ஜீவன் யமபுரியை நோக்கிச் செல்லும் போது குளிர்ந்த நிழல் நிறைந்த மார்க்கமாகச் செல்வான். மாரடி தானம் குதிரை மேல் ஏறிச் செல்வான். அவன் செல்லும் வழியில் முள் முதலியவற்றால் துன்பம் ஏதும் அடையாமல் செல்வான். ஆசனப் பலகையையும் செப்புத் தாலியையும் சுயம்பாகம் பொருளையும் தானஞ் செய்தால் இறந்த பிறகு ஆகாய மார்க்கமாகவே இனிதாகச் செல்வான். அரிசியும் எள்ளும் பதின்மூன்று கடகமும் மோதிரமும் குடையும் விசிறியும் பாதரக்ஷையையும் அவசியமாகத் தானஞ் செய்தல் வேண்டும். யானை, குதிரை இவற்றைத் தானஞ் செய்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேஷமான புண்ணியமாகும். உரிமைக் கிடாவைத் தானஞ் செய்தால் விசேஷமான புண்ணியமாகும். உரிமைக் கிடாவைத் தானஞ் செய்யும்போது அதனுடன் ஏராளமான பொருட்களையும் தானஞ் செய்வது மிகவும் சிறப்பாகும். வெற்றிலை, பாக்கு, புஷ்பம் ஆகியவற்றைத் தானஞ் செய்தால் யமதூதர்கள் மகிழ்ச்சியடைந்து ஜீவனை வருந்தச் செய்யமாட்டார்கள். ஆடைகளைத் தானஞ் செய்தால் யமதூதர்கள் ஜீவனின் முன்பு நல்ல உருவத்துடன் தோன்றுவார்கள். 'எள்' என்பது விஷ்ணுவின் வியர்வையிலிருந்து தோன்றியதாகையால் அந்தத் தானியம் மிகவும் பரிசுத்தமானது. அந்த எள் இரு வகைப்படும். சுற்று எள், வெள்ளை எள் என்ற இரு வகையில் எந்த நிறமுள்ள எள்ளையேனும் தானங்களோடு சேர்த்துக் கொண்டால் அதிக பயன் உண்டாகும். அதாவது சிறப்புடையதாக அமையும். சிரார்த்த காலத்தில் கறுப்பு எள்ளை சேர்த்தால், பிதுர்த் தேவர்கள் மிகவும் திருப்தியடைவார்கள்.

மனிதனாகப் பிறந்தவன் என்றாவது ஒரு நாள் இறந்தே தீர வேண்டும் என்பதை உணர்ந்தவன் மேலே சொன்ன தானங்களைத் தனக்குத் தானே செய்துகொள்ள வேண்டும். தானம் செய்ய வசதி இல்லாவிட்டால் தினமும் ஒரு ரூபாய் என்றாலும் தருமம் செய்ய வேண்டும்.

இறந்தபின் அவர்களுடைய பெயரில் செய்யும் தானத்தை விட, வாழும் காலத்தில் அவன்தானே முன் வந்து தானங்கள் செய்வானாகில் இறந்தபின் அவன் மோட்ச பலனை அடைவான் எனக் கருட புராணம் சிறப்பாகக் கூறுகிறது.

நன்றி


தொகுப்பு

**வைத்திய கலாநிதி க. மாணிக்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

நல்லதை நினைத்து நல்லதை செய்து எல்லோரும் இன்பமாக வாழ்வோம் என்னும் நல் உள்ளத்துடன் வாழ்ந்த எங்கள் குடும்பத் தலைவி சிவபதமடைந்த வேளை, எமது இல்லத்திற்கு வருகை தந்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி அஞ்சல் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரம் வழங்கியோருக்கும், இறுதிக் கிரியைகளிற் கலந்து கொண்டவர்களுக்கும் அங்கு வேண்டிய உதவிய புரிந்த அனைவருக்கும், அந்தியேட்டிக் கிரியை, வீட்டுக் கிரியை ஆகியவற்றில் கலந்து சிறப்பித்த உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் இம் மலரை அச்சமைக்க ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உசன்

**மிருசுவில்.**

**23-03-2012**

இங்ஙனம்

**மாணிக்கம் சக**


**சரவணபவானந்தன் மகேஸ்வரி**

**குடும்பத்தினர்.**

திருக்கணித பதிப்பகம் - சாவகச்சேரி - 021 227 0257

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org